## கலை பண்பாட்டுத்துறை இயக்குநர் அவர்களின் செயல்முறைகள்,சென்னை–08

முன்னிலை : திருமதி. வ.கலையரசி இ.ஆ.ப.,

செயல்முறை ஆணை எண் : 1545/இ1/2020–1 நாள் 15.04.2020

பொருள் கோவிட் 19– தமிழ்நாடு அரசின் கீழ் செயல்படும் அமைப்பு சாரா தொழிலாளர் நலவாரியங்களின் உறுப்பினர்களுக்கு சிறப்பு நிவாரண நிதி ரூ 1000/– வழங்குதல் – தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்கள் பட்டியல் அளித்தல் – மாவட்ட வாரியாக நிதி ஒதுக்கீடு வழங்குதல் தொடர்பாக

பார்வை 1 அரசாணை (நிலை) எண் 189 வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை நாள் 11.04.2020

2 முதன்மை செயலாளர்/ஆணையர், வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அவர்களின் செயல்முறைகள் எண் OC-1/563/2020 நாள் 13. 04. 2020

= = = = = =

ஆணை :

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 06.04.2020 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பில், கொரானா (கோவிட்–19) தொற்றினை எதிர்கொள்ளத் தேவையான வாழ்வாதாரத்தை அனைத்து தரப்பினருக்கும் உறுதி செய்திடும் வகையில், தமிழ்நாடு அரசின் கீழ் செயல்படும் அமைப்பு சாரா தொழிலாளர் நலவாரியங்களின் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு ரூ 1000/– சிறப்பு நிவாரண உதவி வழங்கப்படும் என அறிவித்துள்ளார்கள். இவ்வறிவிப்பில் கலை பண்பாட்டுத்துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு நாட்டுப்புறக்கலைஞர்கள் நலவாரியத்தில் உறுப்பினர்களாக பதிவு செய்துள்ள நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு (கிராமிய கலைஞர்களுக்கு) ரூ 1000/– சிறப்பு நிவாரண நிதி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

2) பார்வை 1 இல் காணும் அரசாணையின் பத்தி 5 இல் தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு அமைப்பு சாரா தொழிலாளர்கள் நலவாரியங்களில் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு ரூ 1000/– வீதம் சிறப்பு நிவாரண நிதி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இவ்வாணையின் பத்தி 5 வரிசை எண் 5 இல் கலை பண்பாட்டுத்துறையின் கீழ் இயங்கும் தமிழ்நாடு நாட்டுப்புறக்கலைஞர்கள் நலவாரியத்தில் பதிவு செய்த 37,385 உறுப்பினர்களுக்கு சிறப்பு நிவாரண நிதி வழங்க வழி வகை செய்யப்பட்டுள்ளது. மேலும் அவ்வாணையில் வாரியத்தில் போதிய நிதி இல்லாத

Scanned with CamScanner

இனங்களுக்கு மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து (SDRF) வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) பார்வை 2 இல் காணும் செயல்முறைகளில் தமிழ்நாடு நாட்டுப்புறக்கலைஞர்கள் நலவாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு ரூ 1000/-வீதம் சிறப்பு நிவாரண நிதி வழங்கும் வகையில் ரூ 3,73,85,000/- நிதியினைப் பெற்று வழங்க கலை பண்பாட்டுத்துறை இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது, கலை பண்பாட்டுத்துறையின் கீழ் இயங்கும் தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தில் மிக குறைவான அளவிலான பணியாளர்கள் உள்ள நிலையில் தமிழகத்தின் பாரம்பரிய கலைகளை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள கிராமிய நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு விரைவாகவும், அதே நேரத்தில் அரசின் நிவாரணங்கள் வழங்குவதற்கான வழிகாட்டுதல்களின்படியும் நிவாரண நிதியினை மாவட்ட நிர்வாகத்தின் மூலம் வழங்க வேண்டியது அவசியமாகிறது. எனவே மாவட்ட ஆட்சியர்கள் வாயிலாக இந்நிவாரண நிதியினை பதிவு பெற்ற நாட்டுப்புறக்கலைஞர்களுக்கு வழங்குவதற்கான திட்ட செயலாக்க வழிகாட்டுதல் விவரங்கள் வருமாறு :-

i) கலை பண்பாட்டுத்துறை இயக்குநரால் நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தில் உறுப்பினர்களாக பதிவு செய்து கொண்டுள்ள கலைஞர்கள் பட்டியல் மாவட்ட வாரியாக தயாரிக்கப்பட்டு நாட்டுப்புறக்கலைஞர்கள் பற்றிய விவரங்கள் விரிதாள் (Spread sheet) முறையில் மின்னஞ்சல் மூலமாக சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மாவட்ட ஆட்சியர்கள் தங்கள் மாவட்டத்தில் இத்திட்டத்தின் செயலாக்கத்தினை கண்காணிக்க மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளரை ( பொது அல்லது கணக்கு) ஒருங்கிணைப்பு அலுவலராக (Nodal Officer) நியமிக்க வேண்டும்.

ii) ஒவ்வொரு மாவட்ட ஆட்சியரும் தங்கள் மாவட்டத்திற்கான உறுப்பினர் பட்டியலை விரிதாள் (Spread sheet) முறையில் வட்ட வாரியாக பிரித்து வட்டாட்சியர்களுக்கு அனுப்ப வேண்டும். வருவாய் கோட்டத்திற்கான பட்டியலை கோட்டாட்சியர்/ சார் ஆட்சியருக்கு அனுப்ப வேண்டும்.

iii) வட்டாட்சியர்கள் தங்கள் வட்டத்திற்கான பட்டியலை கிராம வாரியாகப் பிரித்து உரிய பட்டியலினை அந்தந்த கிராம நிர்வாக அலுவலர்களிடம் வழங்கிட வேண்டும்.

iv) கிராம நிர்வாக அலுவலர்கள் பட்டியலில் கண்டுள்ள பதிவ் பெற்ற கலைஞர்களைத் தொடர்பு கொண்டு அவர்களது பதிவு பெற்ற நாட்டுப்புறக்கலைஞர்கள் நல வாரிய உறுப்பினருக்கான அடையாள அட்டைகளை சரி பார்த்து அவற்றின் நம்பத்தன்மையை உறுதி செய்து கொள்ள வேண்டும். பின்னர் அக்கலைஞரின் ஆதார் அட்டை இருப்பின் அதன் விவரம் மற்றும் வங்கி கணக்கு விவரங்களையும் (வங்கி பெயர், கிளை, ஐ.எப்.எஸ்.சி கோடு எண், கணக்கு எண்) ஒப்பிட்டு சரிபார்த்து படிவம் 1 இல் உள்ள விவரங்களை நிரப்பி கலைஞரின் கைபொப்பத்தினைப் பெற வேண்டும்.

Scanned with CamScanner

v) கிராம நிர்வாக அலுவலருக்கு அளிக்கப்பட்டுள்ள பட்டியலில் இடம் பெற்றுள்ள நாட்டுப்புற கலைஞர்கள் முகவரியில் இல்லாத நிலையில் முகவரி மாற்றம் குறித்த விவரத்தினை குறிப்பு காலத்தில் எழுத வேண்டும். மாவட்டத்திற்குள் மாறுதல் இருப்பின் மாவட்ட ஆட்சியர் வாயிலாக தொடர்புடைய கிராம நிர்வாக அலுவலருக்கு மாறுதல் செய்ய வேண்டும். மாவட்ட மாறுதல் எனின் கலை பண்பாட்டு இயக்ககத்தின் மின்னஞ்சல் முகவரியில் (artandculture@tn.nic.in) தினசரி தெரிவிக்க வேண்டும். கலை பண்பாட்டு இயக்ககம் மூலம் தொடர்புடைய மாவட்டத்திற்கு உறுப்பினரது விவரம் மாற்றி அளிக்கப்படும்.

vi) அனைத்து விபரங்களையும் சரி பார்த்த பின்னர் தகுதியான ஒவ்வொரு பதிவு பெற்ற நாட்டுப்புறக் கலைஞரின் வங்கிக் கணக்கிலும் தலா ரூபாய் 1000/– மின்னணு பரிமாற்றம் மூலமாக செலுத்திட வேண்டும்.

vii) தொடர்புடைய வட்டாட்சியர்கள் கிராம நிர்வாக அலுவலரின் பணியினை முழுமையாக சரிபார்த்து பதிவு பெற்றுள்ள நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு நிவாரண நிதி வழங்குவதை உறுதி செய்ய வேண்டும். இந்நிவாரண நிதி பதிவு பெற்ற கலைஞர்களுக்கு சரியான முறையில் சென்றடைவதை தணிக்கை செய்து தொடர்புடைய கோட்டாட்சியர்/ சார் ஆட்சியர் முழு பொறுப்பு ஏற்க வேண்டும்.

viii) இணைக்கப்பட்டுள்ள படிவங்களில் ( படிவம் 1 மற்றும் படிவம் 2 ) மாவட்ட வாரியாக விபரங்களை நிரப்பி தினசரி அறிக்கையினை விரிதாள் (Spread sheet) வடிவில் மின்னஞ்சல் வாயிலாக இயக்குனரகத்திற்கு artandculture@tn.nic.in என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். இதனை மாவட்ட ஆட்சியர் அலுவலக ஒருங்கிணைப்பு அலுவலர் உறுதி செய்ய வேண்டும்.

ix) கிராம அளவில் பதிவு செய்துள்ள கலைஞர்கள் பட்டியலைச் சரி பார்க்கும் பொழுது யாராவது பதிவு செய்துள்ள கிராமியக் கலைஞர் இறந்து விட்டதாக அறியப் பட்டால் குறிப்புக்காலத்தில் அதனைக்குறிப்பிட்டு இறந்த கலைஞர்களின் பட்டியலை மாவட்டம் முழுமைக்குமாகத் தயாரித்து கலை பண்பாட்டுத் துறை இயக்குனருக்கு அனுப்பிட வேண்டும்.

x) மாவட்ட ஆட்சியர்கள், தங்களுக்கு அனுப்பப்பட்ட பட்டியலில் குறிப்பிட்டுள்ள பதிவு பெற்ற நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு உதவித் தொகை அளிக்க இயலாவிட்டால் அதற்கான காரணத்தை திட்ட இறுதியில் அறிக்கையாக தொகுத்து இயக்குநருக்கு அனுப்ப வேண்டும்.

xi) மாவட்ட ஆட்சியர்கள் திட்டத்தினை நிறைவேற்றிய பின்னர் மாவட்டத்திற்கான பயனீட்டு சான்றிதழை கலை பண்பாட்டு இயக்குநருக்கு அளிக்க வேண்டும்.

**4)** புதிதாக தோற்றுவிக்கப்பட்டுள்ள மாவட்டங்களுக்கும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ள மாவட்டத்தின் ஒதுக்கீட்டில் இருந்து இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள சதவீத அடிப்படையில் நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது. புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட மாவட்டங்களுக்கும்

Scanned with CamScanner

ஒருங்கிணைந்த மாவட்டங்களுக்கான பட்டியல் அனுப்பப்படுகிறது . புதிதாக தோற்றுவிக்கப்பட்டுள்ள மாவட்டங்களின் மாவட்ட ஆட்சியர்கள் தங்கள் மாவட்டத்திற்குரிய பயனாளிகளின் பட்டியலைப் பிரித்து நிவாரண நிதியினை வழங்க வேண்டும்.

5) தமிழ்நாடு நாட்டுப்புறக்கலைஞர்கள் நலவாரிய உறுப்பினர்களுக்கு சிறப்பு நிவாரண நிதி ரூ.1000/– வழங்கும் வகையில் இணைப்பு –1 இல் கண்டுள்ளவாறு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நிதி பகிர்ந்தளிக்கப்படுகிறது. மாவட்ட ஆட்சியர்கள் இத்தொகையினைக் கீழ்காணும் தலைப்பில் தொடர்புடைய கருவூலத்தில் பட்டியலிட்டு பெற்று வழங்குவதற்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

> **2245**–Relief on Account of Natural Calamaities 80 General -800 other expenditure State's Expenditure-AH Disaster preparedness/preventive measures to contain the outbreak of Corona Virus (Covid 19)
> 309 Grants –in Aid -09 Others
> (Old DPC 2245 80 800 AH 0998)
> (IFHRMS DPC 2245 80 800 AH 30909)

நாட்டுப்புறக்கலைஞர்கள் நலவாரியத்தின் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு வழிகாட்டுதல் நெறிமுறைகளில் தெரிவித்தவாறு கலை பண்பாட்டுத்துறையின் மூலம் அளிக்கப்படும் பட்டியலில் உள்ள கலைஞர்களுக்கு சிறப்பு நிவாரண நிதியினை வழங்குவதற்கும் மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

(ஒம்.) வகலைஅரசி,
இயக்குநர்

பெறுநர்
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்

நகல்

1. கூடுதல் தலைமைச் செயலாளர், சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9
2. முதன்மை செயலாளர்/ஆணையர், வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, சென்னை–5
3. மாநிலக்கணக்காயர், சென்னை–18
4. சம்பள கணக்கு அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை–9
5. சம்பள கணக்கு அலுவலர்/ மாவட்ட கருவூல அலுவலர், அனைத்து மாவட்டங்கள்

//நேர்படி அனுப்பலாகிறது//

11/04/2020
கணக்கு அலுவலர்

**கணக்கு அலுவலர்**
**கலை பண்பாட்டு இயக்ககம்.**
**சென்னை-8.**

Scanned with CamScanner

## இணைப்பு–I

தமிழ்நாடு நாட்டுப்புறக்கலைஞர்கள் நலவாரியத்தின் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு நிவாரண நிதி ரூ 1000/ வழங்குவதற்கான மாவட்ட வாரியாக நிதி ஒதுக்கீடு செய்யப்படும் விவரம்:–

| வ.எண் | மாவட்டம் | உறுப்பினர்கள் | ஒதுக்கீட்டுத் தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1 | சென்னை | 946 | 946000 |
| 2 | காஞ்சிபுரம் | 1251 | **1001000 |
| 3 | திருவள்ளூர் | 995 | 995000 |
| 4 | திருவண்ணாமலை | 2431 | 2431000 |
| 5 | வேலூர் | 1926 | **963000 |
| 6 | சேலம் | 1562 | 1562000 |
| 7 | தருமபுரி | 2397 | 2397000 |
| 8 | கிருஷ்ணகிரி | 1744 | 1744000 |
| 9 | நாமக்கல் | 804 | 804000 |
| 10 | கோயம்புத்தூர் | 821 | *657000 |
| 11 | ஈரோடு | 487 | 487000 |
| 12 | திருப்பூர் | 173 | *337000 |
| 13 | நீலகிரி | 164 | 164000 |
| 14 | திருச்சிராப்பள்ளி | 1999 | 1999000 |
| 15 | கரூர் | 354 | 354000 |
| 16 | புதுக்கோட்டை | 484 | 484000 |
| 17 | பெரம்பலூர் | 252 | *202000 |
| 18 | அரியலூர் | 335 | *385000 |
| 19 | தஞ்சாவூர் | 1773 | 1773000 |
| 20 | விழுப்புரம் | 3231 | **2585000 |
| 21 | கடலூர் | 1933 | 1933000 |
| 22 | திருவாரூர் | 642 | 642000 |
| 23 | நாகப்பட்டிணம் | 586 | 586000 |
| 24 | மதுரை | 1310 | 1310000 |
| 25 | திண்டுக்கல் | 970 | 970000 |
| 26 | இராமநாதபுரம் | 468 | 468000 |
| 27 | சிவகங்கை | 431 | 431000 |
| 28 | தேனி | 511 | 511000 |
| 29 | திருநெல்வேலி | 2146 | **1503000 |

Scanned with CamScanner

| | | | |
|---|---|---|---|
| 30 | விருதுநகர் | 783 | 783000 |
| 31 | தூத்துக்குடி | 867 | 867000 |
| 32 | கன்யாகுமரி | 609 | 609000 |
| 33 | செங்கல்பட்டு | - | 250000 |
| 34 | இராணிபேட்டை | - | 385000 |
| 35 | திருப்பத்தூர் | - | 578000 |
| 36 | கள்ளக்குறிச்சி | - | 646000 |
| 37 | தென்காசி | - | 643000 |
| | மொத்தம் | 35385 | 3,53,85,000 |

1 * தமிழ்நாடு நாட்டுப்புறக்கலைஞர்கள் நலவாரியம் தோற்றுவிக்கப்பட்ட 2008 இல் தோற்றுவிக்கப்பட்டு பதிவுகள் தொடங்கப்பட்ட நிலையில் திருப்பூர் மற்றும் அரியலூர் ஆகிய மாவட்டங்களுக்கான பதிவுகள் ஒருங்கிணைந்த மாவட்டமான கோயம்புத்தூர் மற்றும் பெரம்பலூரில் இடம் பெற்றுள்ளமையால் கோயம்புத்தூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களுக்கான ஒதுக்கீட்டில் 20 சதவீதம் உறுப்பினர்களுக்கான நிதி குறைக்கப்பட்டு திருப்பூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களுக்கான ஒதுக்கீட்டில் சேர்க்கப்படுகிறது.

2 ** புதிதாக தோற்றுவிக்கப்பட்ட மாவட்டங்களான செங்கல்பட்டு, இராணிபேட்டை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, தென்காசி ஆகிய மாவட்டங்களுக்கான ஒதுக்கீடு ஒருங்கிணைந்த மாவட்டத்திலிருந்து உறுப்பினர்கள் எண்ணிக்கைகையில் கீழ்காணும் விகிதத்தின் படி பிரித்து அளிக்கப்படுகிறது.தேவைக்கேற்ப கூடுதல் நிதி வழங்கப்படும்

1. காஞ்சிபுரம் 70 % செங்கல்பட்டு 30 %
2. வேலூர்– 50 % , இராணிபேட்டை– 20 %, திருப்பத்தூர்–30%
3. திருநெல்வேலி 70 % தென்காசி 30 %
4. விழுப்புரம் 80 % கள்ளக்குறிச்சி 20 %

(ஒம்..) வ.கலைஅரசி,
இயக்குநர்

//நேர்பட்டி அனுப்பலாகிறது//

16/04/2020
கணக்கு அலுவலர்

கணக்கு அலுவலர்
கலை பண்பாட்டு இயக்ககம்.
சென்னை-8.

Scanned with CamScanner